பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 30 | செவ்வாய்க்கிழமை | 15.08.2023 | அதிர்வு 15

## கோப்பாய் விபத்தில் பெண் ஒருவர் சாவு!



யாழ்ப்பாணம் – கோப்பாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – டிப்பர் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 07

# தென்னிலங்கை இனவாதிகளின் வாய்களுக்குப் பூட்டுப் போடுங்கள்!

## இல்லையேல் பேச்சு நடத்த முடியாதென ஜனாதிபதியிடம் மாவை இடித்துரைப்பு



"நாட்டில் மீண்டும் வன்முறையை - இன மோதலைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வரும் பௌத்த சிங்கள அரசியல்வாதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்படுத்த வேண்டும். அவர்களின் வாய்களுக்கு உடனடியாகப் பூட்டுப் போட வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார். 02



# வன்முறையைத் தூண்ட இனி எவருக்கும் அனுமதி இல்லை!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தனா உறுதி

இனவாதக் கருத்துக்கள் ஊடாக வன்முறையைத் தூண்ட இந்த நாட்டில் எவருக்கும் இனி அனுமதி இல்லை என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

"இனவாதத்தாலும் வன்முறையாலும் மீண்டும் இங்கு இரத்த ஆறு ஓடக் கூடாது என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இன, மத பேதமின்றி நாம் செயற்பட வேண்டும். நாட்டின் பிரஜைகள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையாகச் 03



அமைச்சரவையில் குத்துவெட்டு

## விரைவில் அரசுக்குள் புது எதிரணி



அடித்துக் கூறுகிறார் பீரிஸ்

னாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சரவைக்கும் இடையில் இணக்கப்பாடற்ற தன்மை காணப்படுகிறது. 03

## கொழும்பில் தமிழ் ஒருவர் நேற்றிரவு சடலமாக மீட்பு!

கொழும்பில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்தவரும் கொழும்பு – மகரகம பிரதேசத்தில் வசித்து வருபவருமான தனபாலசிங்கம் வைகுந்தன் (வயது 39) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த 7 வருடங்களாகக் குடும்பத்தினருடன் மகரகமவில் வசித்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. 03

## நாட்டுக்கு எதிரான ரணிலின் தீர்மானங்களை எதிர்ப்போம்



### நாமல் திட்டவட்டம்

பொருளாதார முன்னேற்றத்துக்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம்.

நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தால் அதனை கட்சி என்ற ரீதியில் கடுமையாக எதிர்ப்போம் என 07



## இரகசியம்

"பணம் வாங்கிக் கொண்டு தான் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் விதத்தில் தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் முடிவை அறிவித்தீர்கள் என்று தொடர்ந்து செய்திகள் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வருகின்றனவே. இது உண்மையா?" – என்று நான் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைப் பார்த்து பட்டவர்த்தனமாகக் கேட்டதும் அவர் கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலக சோபாவில் இருந்தபடி என்னை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார்.

"என்ன அண்ணே! உங்களுக்கு எல்லாம் தெரியும். உங்களுக்குமா அப்படி ஒரு சந்தேகம்?" – என்று கேள்வி எழுப்பினார் அவர்.

"ரணில் எங்கள் கோரிக்கைக்கு இணங்கி வருவார் என்றால், எங்கள் மக்களை வாக்களிக்கச் சொல்லும் முடிவில் நாங்கள் இருந்தோம். அந்தச் செய்தியைக் கூட நீங்கள்தான் கடைசி நேரத்திலும் ரணிலுக்கு எடுத்துச் சென்றீர்கள். பணத்தை வாங்கி ராஜபக்ஷவுக்குச் சார்பாக அப்படி ஒரு முடிவை எடுத்திருந்தோம் என்றால் ரணிலுக்கு அப்படிக் கடைசி நேரத்தில் எவ்வாறு உங்கள் மூலம் செய்தி அனுப்ப முடியும்?அது உங்களுக்குப் புரியவில்லையா?" – என்று கேட்ட அவர் தொடர்ந்தார்.

"எங்களுடைய இயக்கத்தின் பல பிரிவுகளும் அவையவற்றின் செயற்பாட்டுக்காகத் தேடக்கூடிய நிதி ஆதாரங்களைத் தேடி வருகின்றமை உங்களுக்கு தெரியும். நீங்கள் குறிப்பிட்ட பூவண்ணன் எங்கள்அமைப்பில் வவுனியா நிர்வாகப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கிறார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவரும் இயக்கத்துக்கு நிதி திரட்டி இருப்பார். அது தவறில்லை. திரட்டிய நிதி பற்றி அவர் உரிய பிரிவுக்கு அறிவித்திருப்பார். அப்படி தென்னிலங்கையில் இருந்து மஹிந்த பக்கத்து தூதுக்குழு ஒன்று வந்து தங்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திச் சென்றது பற்றிய அறிக்கையை பூவண்ணன் தந்திருந்தார். நான் அதைப் பார்த்தேன். அப்படி வந்தவர்களின் பெயர்ப் பட்டியலில் பஸில் ராஜபக்ஷ என்ற பெயரும் இருந்தது. அதற்கு (பூவண்ணனுக்கு) மேல் மட்டத்தில் நாங்கள் யாரும் அதில் சம்பந்தப்படவில்லை." – என்றார் அவர்.

இன்னொரு கருத்தையும் அவருக்கு அருகில் இருந்த இன்னொரு உதவியாளர் சொன்னார். நான் அவரின் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை.

"அண்ணே! உங்களுக்கு தெரியும், தாண்டிக்குளம் தடைநிலையில ஆயத் தீர்வை மூலம் நாங்கள் ஒரு நாளைக்கு எவ்வளவு நிதி சேகரிக்கிறோம் என்பதை மேலோட்டமான பார்வையில் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்போது மஹிந்தவுக்காகக் கைமாறிய பணம் என்று கூறப்படுகின்ற தொகை அல்லது ஊடகங்களில் வெளியாகின்ற தகவல்களில் சொல்லப்படுகின்ற கணக்கை பாருங்கள். தாண்டிக்குளத்தில் இரண்டு வாரத்தில் எங்களுக்கு கிட்டும் வருமானம் அளவு கூட அது இல்லை. அப்படி ஒரு தொகைக்காக நாங்கள் இப்படி ஒரு முக்கிய அரசியல் தீர்மானம் எடுப்போம் என்று யாரும் கருதுவது அர்த்தமற்றது, அபத்தமானது" – என்ற பாணியில் அவரது விளக்கம் இருந்தது. தமிழ்ச்செல்வன் அதை ஆமோதிக்கும் விதத்தில் தலையசைத்தார்.

இன்னொரு விவகாரத்தையும் அந்த உதவியாளரே மேலோட்டமாகக் கோடி காட்டினார்.

"தேர்தலைப் பகிஷ்கரிக்கும் முடிவை இயக்கம் திடீரென எடுக்கவில்லை. அப்படி எடுக்க கூடும் என்பது இரண்டு, மூன்று வாரங்களாகவே இயக்க உள்வட்டாரங்களில் பேசப்பட்டு, ஆராயப்பட்டு வந்தது. வன்னிக்கு வந்த மஹிந்த சார்புத் தூதுக் குழுவினருடன் உரையாடிய எங்கள் உறுப்பினர்களுக்கும் அது பற்றித் தெரிந்திருக்கும். அந்த உரையாடலின் போது அப்படி ஒரு முடிவு இயக்க மட்டத்தில் தீவிரமாக ஆராயப்படுகின்றது என்று அவர்கள் அந்தத் தூது குழுவினரிடம் சொல்லி இருக்க கூடும். அவ்வளவுதான் நடந்திருக்கும். அதற்கு மேல், நிதி உதவி ஏதேனும் தூதுக் குழுவினரால் இயக்கத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கலாம்." – என்றார் அவர்.

நான் புரிந்து கொண்டேன்.

"அப்படியானால் மஹிந்த தரப்பு உங்களின் கீழ் மட்டத்தில்தான் ஊடாடியது, மேல் மட்டத்தில் பேசவில்லையா?" – என்று நான் தமிழ்ச்செல்வனிடம் கேட்டேன்.

அவரது பதிலைக் கேட்டு எனக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போட்டது.

"அவர்கள் (மஹிந்த தரப்பின் பிரதிநிதிகள்) வவுனியா மாவட்ட நிர்வாகத் துறையின் பிரதிநிதிகளுடன் கீழ் மட்டத்தில் பேசினார்கள். ரணில் தரப்புத்தான் மேல்மட்டத்தில் எங்களுடன் பேசியது" என்றார் அவர்.

அந்தத் தேர்தல் முடிந்து நான்கு, ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் அந்த பதிலை கேட்டதும் நான் அலேர்ட்டாகி "ரணில் தரப்பில் மேல்மட்டத்தில் யார் பேசினார்கள்? யாரோடு பேசினார்கள்?" – என்று கேட்டேன்.

தமிழ்ச்செல்வன் என்னை பார்த்து ஏளனத்துடன் ஒரு நக்கல் சிரிப்பு சிரித்தார்.

"என்ன அண்ணே! மூத்த பத்திரிகையாளர் உங்களுக்கு மறதியா? ரணிலின் சார்பில் நீங்கள்தானே அரசியல் பொறுப்பாளரான என்னோடு நேரில் வந்து பேசினீர்கள். பின்னர் உங்கள் பரிந்துரையோடு முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனும் ரணில் சார்பில் என்னை வந்து சந்தித்துப் போனார். தலைவர் எடுத்த முடிவை உங்கள் மூலம்தானே ரணிலுக்குத் தெரியப்படுத்தினோம். இதிலும் விட உயர் மட்டத்தில் புலிகளோடு ஊடாட இடம் உண்டா?" – என்று கேட்டார் அவர்.

நான் ஒரு கணம் விக்கித்துப் போய் நின்றேன்.

அடுத்த நாள் கொழும்புக்கு வந்ததும் நான் ஆசிரியராகப் பணியாற்றிய 'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்களில் தமிழ்ச்செல்வனின் இந்தக் கருத்தை எனது பெயர் குறிப்பிடாமல் முன்பக்கச் செய்தியாக வடித்திருந்தேன்.

தமிழ் மக்களைத் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று வழிப்படுத்துவதற்கான முடிவை அறிவிப்பதற்கு மஹிந்த தரப்பிடம் புலிகள் நிதி வாங்கினார்கள் என்ற தகவலை தமிழ்ச்செல்வன் அடியோடு மறுத்தார் என்றும், தேர்தல் ஏற்பாடு குறித்து மஹிந்த தரப்பல்ல, ரணில் தரப்பே மிகுந்த உயர் மட்டத்தில் புலிகளுடன் பேசியது என்று தமிழ்ச்செல்வன் கூறினார் என்றும் அச்செய்தியில் நான் விவரித்திருந்தேன் என ஞாபகம்.

சரி. அப்படியானால் இந்தப் பணக் கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் மஹிந்த பக்கத்தில் என்ன நடந்திருக்கும்? மஹிந்த என்ன கருத்தியலில் அது பற்றி எண்ணிக் கொண்டிருந்தார்? அவை பற்றிய என்னுடைய கணிப்புகளை – நான் அறிந்து ஊகித்தவற்றை, நாளை விவரிக்கிறேன் நண்பர்களே.

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

"இலங்கை பௌத்த சிங்கள நாடு. இங்கே தமிழர்கள் உரிமை கொண்டாட முடியாது. நான் வடக்கு, கிழக்குக்குச் செல்லவுள்ளேன். அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்குத் திரும்புவேன்" – என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்தானது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மாவை சேனாதிராஜா இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதாவது பௌத்த சிங்கள அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இனவாதக் கருத்துக்களைக் கக்கி வருவதுடன் மீண்டும் வன்முறையைத் தூண்டும் – இன மோதலுக்கு வழிவகுக்கும் – உரைகளையும் ஆற்றி வருகின்றனர். இதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

நாட்டின் தலைவராக இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்படியான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது. பௌத்த சிங்கள அரசியல்வாதிகளின் இப்படியான கருத்துக்கள் நாட்டில் மீண்டும் வன்முறையைத் தூண்டும் இன மோதலுக்கு வழிவகுக்கும்.

எனவே, தமிழ் மக்களுக்கு எதிராக வலிந்து வன்முறையை – மோதலை ஏற்படுத்த ஜனாதிபதி இடமளிக்கக் கூடாது.

வடக்கு – கிழக்குக்கு வந்து தமிழர்களின் தலைகளை வெட்டிச் செல்வேன் என்று அநாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களை வெளியிட்ட மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, தென்னிலங்கை இனவாதிகளை ஜனாதிபதி கட்டுப்படுத்த வேண்டும். அவர்களின் வாய்களுக்கு உடனடியாகப் பூட்டுப் போட வேண்டும்.

இப்படியான மோசமான செயற்பாடு தொடர்ந்தால் நாம் ஜனாதிபதியுடன் – அரசுடன் எப்படிப் பேச்சு நடத்துவது? இனவாதிகளை ஜனாதிபதி கட்டுப்படுத்தாவிட்டால் அரசுடன் நாம் பேச்சு நடத்த முடியாது.

இதை ஜனாதிபதி ரணிலிடம் நேரில் சொல்ல நாம் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகாவம்ச மனவமைப்பு

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்க வெளியில் ஆக்கிரோஷத்துடன் வெளியிட்டிருக்கும் கருத்து மிக மோசமானது. பௌத்த, சிங்களப் பேரின வாத வெறித்தனத்தின் கொடூர முகத்தை - குரூரப் பண்புகளை - அவலட்சணமான கோலங்களை - வெளிப்படுத்தும் ஓர் உரைகல் அது.

மேலாண்மைத் திமிர் வெறிப்போக்குமிக்க மகாவம்ச மனவமைப்பில் சிக்கிக் கொண்டிருக்கும் பேரின வாதம், திருந்தவே போவதில்லை. தனது மோசமான - அநாகரீகமான - பண்பியல்பை அது எப்போதும் பிரதிபலித்துக் கொண்டேயிருக்கும் என்பதன் அடுத்த கட்ட வெளிப்பாடுதான் மேர்வினின் இந்த நடத்தை.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சுட்டிக் காட்டுகின்றமை போல உலகத் துக்கு அகிம்சை போதித்த போதிசத்துவரின் பெயரால் தலையை வெட்டுவோம் என்று மேர்வின் சில்வா கூறுவது உலக மகா கேலிக்கூத்துத்தான்.

ஆனால் இந்த போக்கு மூன்றாம் தர அரசியல்வாதி யான மேர்வின் மட்டத்துக்கு மட்டுமே உரியதல்ல, அதையும் தாண்டியது.

இந்த நாட்டின் அரசமைப்பினாலும் போற்றி, ஏற்றப் பட்டு, புகழப்பட்டு, கௌரவிக்கப்பட்டு, உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பௌத்த தர்மத்தை, இங்கு பேணுகின்றவர்கள் என்று கூறுகின்ற மத வழி காட்டிகள் கூட இத்தகைய கேலிக்கூத்து போக்கில் மேர்வினுக்கு ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர். பல சமயங்களில் விஞ்சியவர்கள்.

இன்று தமிழர்கள் சார்பில் மேர்வினைக் கடியும் இதே மனோ கணேசன், முன்னர் அமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சுக்கு வந்து பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் எத்தனையாம் தரத்து நபராக நடந்து கொண்டார் என்பதற்கு மனோ கணேசனே நல்ல சாட்சியமாக இருப்பார்.

அஹிம்சையைப் போதித்த பெருமகனாரின் பெயரில் அரங்கேறும் அநாகரிகத்தை - கொடூரத்தை - குரூ ரத்தை - அடக்குமுறை வெறியை - ஆக்ரோஷத் திமிர்த் தனத்தை - இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் மலையகத் தமிழ்ச் சகோதரர்களும் எதிர்கொண்டே வந்திருக்கின்றார்கள்.

மேர்வினின் பேச்சு இனங்களுக்கு இடையில் பதற்றத்தையும் குரோதத்தையும் தோற்றுவிக்கும் செயற்பாடு என்பது வெளிப்படையானது.

இனங்களுக்கு இடையில் இத்தகைய வெறுப்பூட்டும் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழி செய்யும் சிவில் மற்றும் அரசியல் உரி மைகள் மீதான சர்வதேச பட்டயத்தில் (ICCPR) இலங்கை ஒப்பமிட்டுள்ளது. அதற்கு அமைவான சட்டம் 2007 இல் நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையில் இத்தகைய வெறுப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் அத்தகைய சட்டத்தின் கீழ் பிணையில் வெளிவர முடியாத கைதை எதிர் கொண்டு விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தச் சட்டம் ஒரவஞ்சனை காட்டப்படா மல் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக வும் இலங்கையில் பாயுமா என்பது கேள்விக்குறியே. இங்கு மகாவம்ச மனவமைப்பில் இந்தச் சட்டங்கள் எல்லாம் அவர்களுக்குச் செல்லாது என்பதுதான் யதார்த்தப் புற நிலைமையாகும்.

## கொழும்பில் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிகை அலங்கார நிலையத்தில் பணியாற்றி வந்த குறித்த நபர், நேற்று மாலை 5 மணியளவில் பணி முடிந்து வீடு திரும்புகிறார் என மனைவியிடம் தெரிவித்துள் ளார்.

எனினும், வீட்டுக்கு வருகை தராத அவரைக் குடும்பத் தினர் நேற்றிரவு 7.30 மணியளவில் தேடியபோது வீட்டுக்கு அருகாமையில் சடலமாகக் கிடந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை ஆரம்பித் துள்ள பொலிஸார், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வெகுவிரையில் அரசாங்கத்துக்குள் புதிய எதிரணி ஒன்று தோற்றம் பெறும் என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியா லயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியி லும் ஊழல் மோசடி முடிவுக்கு கொண்டு வரப்பட வில்லை.

சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், மோட் டார் வாகனப் பதிவாளர் திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் ரயில்வேத் திணைக்களம் ஆகிய அரச திணைக்களங்களில் இடம்பெறும் ஊழல் மோச டிகளை குறைந்தபட்சமேனும் நிவர்த்தி செய்துக் கொண்டால் நாட்டு மக்கள் மீது வரிச் சுமையைச் சுமத்த வேண்டிய தேவை ஏதுமில்லை என அமைச்சரவைப் பேச்சாள ரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிடு கிறார்.

ஊழல் மோசடியை இல்லாதொழிக்க நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகை யில் மக்கள் மீது வரி விதிப்பு மனசாட்சி இல்லாமல் சுமத் தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தினால் உட வளவ வலய விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

விவசாயிகள் வீழ்ச்சியடைந்தால் அதன் தாக்கத்தை ஒட்டுமொத்த மக்களும் எதிர்கொள்கிறார்கள். சமனல அணையில் இருந்து உடவளவ விவசாய வலயத்துக்கு நீர் விடுவிக்காதது தவறு என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் தான் விவசாயத்துறை அமைச்சர், மின்சாரத்துறை அமைச்சர், நீர்பாசனத்துறை மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் உள்ளார்கள்.

ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய மூன்று அமைச்சுக்களும் முரண்பட்டுக் கொண்டுள்ளன. இறுதி யில் விவசாயிகள் தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சரவைக் கும் இடையில் இணக்கப்பாடற்ற தன்மை காணப்படுகிறது.

வெகுவிரையில் அரசாங்கத்துக்குள் புதிய எதிரணி ஒன்று தோற்றம் பெறும். - என்றார்.

## வன்முறையைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

செயற்பட வேண்டும்" - என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

அப்போதுதான் நல்லிணக்கம் இங்கு நிரந்தரமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் வடக்கு, கிழக்குக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனேயே களனிக்குத் திரும்பவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே பிரதமர் தினேஷ் குணவர்த் தன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் நேற்று நினைவேந்தல்





செஞ்சோலையில் விமான தாக்குதில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் நிணைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு தலைமைத்துவப் பயிற்சிக்காகக் கூடியிருந்த பாடசாலை மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா வான் படையினர் நடத்திய திடீர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 63 பேர் படுகொலை செய்யப்பட்ட நாளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர்நேற்று நினைவு கூர்ந்தனர்.

யாழ்ப்பாணம் நூல் நிலையத்திற்கு முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 2 ஆவது இயந்திரம் நாளை இயங்கும்!

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் செயலிழந்துள்ள இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தை நாளை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி காலை, இந்த மின் உற்பத்தி இயந்திரம் திடீரென செயலிழந்தமையினால் மொத்த மின் சார உற்பத்தியில் 270 மெகாவோட் மின் சாரம், தேசிய கட்டமைப்பிற்கு கிடைக்காது போனது.

மேலும், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று இயந்திரங்களில் ஒரு மின்பிறப்பாக்கி வருடாந்த பராமரிப்புக்காக கடந்த ஜூன் மாதம் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் தற்போது, ஒரேயொரு மின் பிறப்பாக்கி மட்டுமே இயங்கும் நிலையில் உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சமனல வாவி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்தமையினால் அதன் மின் உற்பத்தி நிலையத்திலும் மின்சார உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு சுவர்களுக்கு இடையில் சிக்கிய பாடசாலை மாணவி!



களுத்துறை பிரதேசத்தில் பாடசாலை ஒன்றின் இரு சுவர்களுக்கு இடையில் சிக்கியிருந்த மாணவி தீவிர நடவடிக்கையின் பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர் இணைந்து ஹைட்ரோலிக் எரிவாயு மூலம் 2 சுவர்களுக்குமிடையிலான இடைவெளியை அதிகரித்து மாணவியை காப்பாற்றியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம் வகுப்பில் கல்வி கற்கும் இந்த மாணவி விளையாடும் பொழுது, இரண்டு சுவர்களுக்கிடையில் சிக்கியுள்ளார்.

எனினும், இதன்பின்னர் அவருக்கு வெளியே வருவது கடினமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலை ஆசிரியர்கள் மாணவியை வெளியே எடுக்க முயன்றுள்ள போதிலும் அது சாத்தியமாகியிருக்கவில்லை.

இதனையடுத்து, களுத்துறை தீயணைப்பு படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, அவர்கள் இந்த மாணவியை மீட்டுள்ளனர்.

# காதலால் மோதல் ஒருவர் கொலை

கேகாலை மாவட்டம் எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எக்லாஸ் தோட்டத்தின் கீழ் பிரிவில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போதே 3 குழந்தைகளின் தந்தையான இந்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரரின் மகளின் காதல் விவகாரம் காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 10 லட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகைகள் பாடசாலைகளுக்கு

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்கு உட்பட்ட பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு 10லட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகைகளை கனடாவில் வாழும் முனைக்காட்டை சேர்ந்த பொறியியலாளர் கோபாலபிள்ளை துரைராஜசிங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

முனைக்காடு கிராமத்திலே இருக்கும் விவேகானந்த மகா வித்தியாலயம் மற்றும் சாரதா வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

# வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் பல மோசடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன!

## அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவிப்பு



வீதிகளில் பயணிக்கும் வாகனங்களில், சுமார் 20 சதவீதமானவை மோசடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் இலங்கை ரயில்வேத் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக 50 சதவீத அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனங்களை ஊழல் மற்றும் மோசடிகளில் இருந்து விடுவிப்பதற்கான ஒரே வழி டிஜிட்டல் மயமாக்கல் மாத்திரமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச வருமானம் ஈட்டுவதில் குறித்த 5 அரச நிறுவனங்களும் பிரதான பங்கு வகிக்கின்றன எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு வரலாமாம் புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் தகவல்



இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா கையிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரீமா மற்றும் செரண்டிப் தவிர அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஜூலை 16 ஆம் திகதி முதல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம் தடை விதித்துள்ளது.

தடை விதிக்கப்பட்ட நேரத்தில், புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்களிடம் கோதுமை மா பாரிய அளவில் கையிருப்பில் இருந்தது.

அது தற்போது தீர்ந்து வருவதாகவும் இந்த நிலை காரணமாக சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனப் புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கடந்த மாதம் 18 ஆம் திகதி ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் குறைத்திருந்த நிலையில், தற்போது சந்தையில் ஒரு கிலோ கோதுமை மா 220 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீதிப் பெயர்ப்பலகையில் சிங்களத்தில் தவறு மன்னிப்புக் கோருகிறார் முன்னாள் தவிசாளர்






தனது பதவிக்காலத்தில் இடப்பட்ட பெயர்ப்பலகையில் சிங்கள மொழி தவறாக இடம்பெற்றமையினால் அப்பிழையான அர்த்தத்தினால் சிங்கள சகோதரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குத் தானாக முன்வந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளமையுடன் உரிய திருத்தத்தை மேற்கொள்ளவும் பிரதேச சபை செயலாளரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

எம்மால் புனரமைக்கப்பட்ட கோப்பாய் பகவான் பாதைக்கான வீதியின் பெயர்ப்பலகையில் காணப்பட்ட சிங்கள மொழியில் தவறு காரணமாக அது பிழையான அர்த்தத்தினை சிங்கள மொழியில் வெளிப்படுத்தியது. இது சமூக ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டிருந்தது. சிங்கள மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட பலரும் முகப்புத்தகத்தில் கவலை தெரிவித்திருந்தனர். இதனை சமூக செயற்பாட்டாளர் விஸ்வநாதன் ஆதித்தன் எனது கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து நான் சிங்கள மொழி பெயர்ப்பாளர் ஒருவர் ஊடாக விமர்சனத்தில் உண்மையுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளேன். எனது பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் பிரதேச சபை செயலாளர் இராமலிங்கம் பகீரதனின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளமையுடன் பிரதேச சபை நடவடிக்கையை எடுப்பதற்கு வசதியாக முதற்கட்ட கருமமாக அங்கு காணப்பட்ட தவறான அர்த்தத்தில் காணப்பட்ட சிங்கள பதத்தினை மறைத்துள்ளது. இயன்ற விரைவில் குறித்த பெயர்ப்பலகை பிரதேச சபையால் மாற்றியமைக்கப்படவுள்ளது.

இப்பெயர்ப்பலகை எனது பதவிக் காலத்தில் இடப்பட்டதன் அடிப்படையில் இதனால் பாதிக்கப்பட்ட சகோதர மொழி மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக நான் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கின்றேன். நாம் தமிழராக இந் நாட்டில் வரலாற்று ரீதியில் எமது மொழி எவ்வளவு தூரம் ஒடுக்கப்பட்டது என்பதையும் ஒடுக்கப்படுகின்றது என்பதையும் நான் நன்கு அறிவேன். இன்றும் நாட்டில் தமிழ் மொழி அரச கரும மொழிச் சட்டங்களுக்கு அமைய பரிபாலிக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். எமது மொழி பல இடங்களில் தூஷணமாகக் கூட அர்த்தப்படுத்தல் இடம்பெற்றுள்ளதை கண்டு அவற்றுக்கு எதிராக நான் செயற்பட்டும் இருக்கின்றேன்.

இந் நிலையில் விமர்சனங்களை முன்வைப்போரின் ஆதங்கத்தினை மதிக்கின்றேன். எமது பதவிக் காலத்தில் இடப்பட்ட பகவான் பாதைக்காக பெயர்ப்பலகையில் காணப்பட்ட பதமும் தவறான சிங்கள அர்த்தப்படுத்தலுக்கே உரியது என்பதை இன்று தெரிந்து கொண்டேன். கிட்டத்தட்ட 5 மாதங்களுக்கு மேலாக பகிரங்க வெளியிலும் இப் பெயர்ப்பலகை காணப்பட்டுள்ளது. இது வருந்தத்தக்கது.

இதுபற்றிய தவறு சுட்டிக்காட்டப்பட்டவுடன் அரச உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளார்கள். எமது மொழி பயன்பாட்டுத் தவறு காரணமாக இவ் விடயத்தில் பாதிக்கப்படும் ஒவ்வொரு சிங்கள சகோதரர்களிடத்திலும் நான் மன்னிப்புக்கோருகின்றேன். இதே வேளை வடக்குக் கிழக்கிற்கு வெளியே தமிழ் மொழி அமுலாக்கம் மற்றும் தவறான அர்த்தப்படுத்தல்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை அவசியம் என்பதையும் அதற்கெதிராக போராடுவதற்கும் முற்போக்காளர்களை வலியுறுத்துகின்றேன். – என்றார்.


Pearl Island Inn
Hotel & Restaurant
Dine - in | Take Away | Soft Drinks
குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்
உங்கள்
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)
தொடர்புகளுக்கு
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com

## நாட்டுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாத்ததும்பர பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைத்துள்ளோம்.

இருப்பினும் ஜனாதிபதியின் அரசியல்,பொருளாதார கொள்கைக்கும்,எமது அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

69 இலட்ச மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிமாற்றத்தை தோற்றுவித்தார்கள்.

பொய்யான போராட்டத்தால் துரதிஷ்டவசமாக மக்களாணை பலவீனப்படுத்தப்பட்டது.

ராஜபக்ஷர்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தின் ஊடாக அரசமைப்புக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

போராட்டத்துக்கு முகம் கொடுத்த அனுபவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

படலந்த சம்பவம் தொடர்பில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நாங்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

நெருக்கடியான சூழலில் அரசாங்கத்தை பொறுப்பேற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வரவில்லை.

ராஜபக்ஷர்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை பாதுகாப்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தால் அதை கடுமையாக எதிர்ப்போம் என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்கிறோம். - என்றார்.

## கோப்பாய் விபத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கணவனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த கோப்பாய் சமுர்த்தி வங்கியின் முகாமையாளரான கோப்பாய் தெற்கைச் சேர்ந்த என்.கௌரிமலர் (வயது 52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் விஷம் அருந்திய நிலையில் சிகிச்சைக்கு




ரம்புக்கனை பத்தம்பிட்டிய பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் விஷம் அருந்தியதால் நேற்றுத் திங்கட்கிழமை காலை மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்புக்கனை பத்தம்பிட்டிய கிராமத்தில் வசிக்கும் 28 வயதுடைய தந்தை, 27 வயதுடைய தாய் மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் ஆகியோரே மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாவனல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தாய், தந்தை இருவரும் வீட்டில் இருந்த தமது இரண்டு பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்துவிட்டு தாமும் அருந்தியிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அவர்கள் வீட்டில் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்ட அயலவர்கள், அவர்கள் நால்வரையும் ஓட்டோவில் கொண்டு சென்று, மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குழந்தைகளுக்கும் பெற்றோரே விஷம் கொடுத்தமைக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை எனப் பொலிஸார் கூறினர்.

## ஓட்டாமடி விபத்தில் இளம்பெண் மரணம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பி.எஸ். வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார்.

தனது சகோதரருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது கல் ஒன்றில் மோட்டார் சைக்கிள் சறுக்கியதில் பின் பக்கத்திலிருந்த பெண் கீழே விழுந்துள்ளார்.

தலைப் பகுதியில் கடும் பாதிப்படைந்த அவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது மரணமடைந்துள்ளார்.

மீராவோடை உதுமான் வித்தியாலயத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் 28 வயதுடைய ஜே. ராஷிதா பர்வின் என்பவரே இவ்வாறு மரணமடைந்தார்.

மரணமடைந்த பெண்ணின் உடல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மாவைக் கந்தன் தேரில் காட்சி





வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து, ஆறுமுகசுவாமி வள்ளி, தெய்வானை சமேதரராய் விநாயக பெருமானுடன் உள்வீதியுலா வந்து தேரில் ஆரோகணித்துப் பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

## மோ. சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட முயன்ற 9 பேர் கைது



மேல் மாகாணத்தின் கோரக்காபொல பிரதேசத்தில் நேற்று அதிகாலை பணப் பந்தயத்திற்காக மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட முற்பட்ட 9 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி வீதியில் நடத்தப்படவிருந்த மோட்டார் சைக்கிள் போட்டி தொடர்பில் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பாணந்துறை வடக்கு பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் கோரக்காபொல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் போட்டியை ஆரம்பிப்பதற்கு தயாரான நிலையில் இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 மற்றும் 26 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் மொரட்டுவை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களுடன் நான்கு மோட்டார் சைக்கிள்களையும் பாணந்துறை வடக்கு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## குருந்தூர்மலையில் வெள்ளி பொங்கல்!

### பக்தர்களுக்கு ரவிகரன் அழைப்பு

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளியன்று ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கல் விழா ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே அனைவரும் இந்த பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கல் மேற்கொள்வதற்கு ஆலய நிர்வாகம் தீர்மானித்திருக்கின்றது.

எனவே மக்கள் அனைவரும் குருந்தூர்மலைக்கு வருகை தந்து ஆதிசிவன் ஐயனாரின் அருளைப் பெறுவதோடு, பொங்கல் விழாவையும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த விடயமானது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டநிலையில், தொல்லியல் திணைக்களம் சைவவழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்தத் தடையுமில்லை எனத் தெரிவித்திருந்தது.

அதற்கமைய இந்த பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. எனவே அனைவரும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# ஹிமாச்சல் பிரதேசத்தில் இந்து கோவில் இடிந்து வீழ்ந்தமையினால் 9 பேர் பலி!





இந்திய வட மாநிலமான ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள பழமையான இந்து கோவில் இடிந்து வீழ்ந்தமையினால் 9 பேர் பலியாகியுள்ளனர்.

அத்துடன், 25 பேர் வரை இடிபாடுகளுக்கு இடையே சிக்குண்டிருக்கலாம் என மாநில தலைமை அமைச்சர் சுக்விண்டர் சிங்ஹா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக ஹிமாச்சல் மாநிலத்தில் தொடர்ச்சியாக கடும் மழையுடன் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், அதிக அளவில் சுற்றுலா பயணிகள் விஜயம் செய்யும் சிம்லா நகரத்தில் நிலசரிவுகளும் இடம்பெற்று வருகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேடு காரணமாக மாநிலத்தில் கடந்த 24 மணி நேரத்தினுள் 21 மரணங்கள் பதிவாகியுள்ளன என தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேடு தொடர்வதனால் மீட்பு பணிகள் மெதுவாகவே இடம்பெறுகின்றன.

வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என அதிகாரிகள் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

மாநிலத்தில் உள்ள வேறு நான்கு இந்துக்களின் ஆலயங்கள் எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதாக மீட்பு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# குடியரசுத் தலைவருக்கு முதல்வர் கடிதம்!

தமிழக சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு மசோதா, தமிழக மக்களின் ஒட்டுமொத்த கருத்தின் பிரதிபலிப்பு எனவும் அதனைச் செயல்படுத்துவதில் ஏற்படும் ஒவ்வொரு நாள் தாமதமும், தகுதி யான மாணவர்களுக்கு மருத்துவ சேர்க்கை கிடைப்பதில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல, சமுதாயத்தில் விலைமதிப்பற்ற மனித உயிரிழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நீட் விலக்கு மசோதாவுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கோரி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

ஒப்புதல் அளிப்பதில் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் துரதிருஷ்ட வசமான விளைவுகள் குறித்து குடியரசுத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்து, நீட் தேர்வு விலக்கு தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் வழங்கிடக் கோரி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

# இந்தியாவில் தொடரும் சீரற்ற வானிலை: 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!



இந்தியாவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக உத்தரகண்ட மாநிலத்தில், மாத்திரம் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 17 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், தெஹ்ரி, டோராடூன், பவுரி, சம்பவத், நைனிடால் மற்றும் உதம் சிங் ஆகிய மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்தப் பகுதியில், ஆயிரத்து 169 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், ஏராளமான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை,எதிர்வரும் அடுத்த 24 மணி நேரத்திற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என சென்னை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சென்னை, எழும்பூர், பாரிமுனை, சேப்பாக்கம், வில்லிவாக்கம், சேத்துப்பட்டு உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்யும் என எதிர்வுக் கூறப்பட்டுள்ளது.

# சீனாவில் பயங்கர நிலச்சரிவு: 21 பேர் பலி, பலர் மாயம்!





சீனாவின் பல மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அங்குள்ள ஷான்சி மாகாணத்தில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் பல வீடுகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்தன.

இதனால் பல இடங்களில் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 16 பேர் காணாமல் போயுள் ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போனவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

## வீடொன்றில் திடீர் வெடி விபத்து: 5 பேர் உயிரிழப்பு, பலர் காயம்!





அமெரிக்காவின் பென்சில்வேனியா பகுதியில் ஒரு வீட்டில் பயங்கர சத்தத் துடன் வெடிவிபத்து ஒன்று ஏற்பட் டுள்ளது.

இதில் 2 வீடுகள் சேதமடைந்துள் ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் அந்த வீடுகளில் இருந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மேலும் சிலர் படுகாய மடைந்துள்ளனர் எனவும் அவர்கள் சிகிச்சைகளுக்காகவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சிலரது நிலைமை கவ லைக்கிடமாக உள்ளது. இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

## மிக நீளமான தாடி: பெண் சாதனை!



ஆண்கள் தாடி வளர்ப்பது பொது வானது. அதே நேரம் பெண்கள் முகத்தில் மீசை வளர்ந்தால் சங்கடப்படுவார்கள்.

ஆனால் மீக நீளமான தாடிக்காக கின்னஸ் சாதனை படைத்துள்ளார் அமெரிக்க பெண் ஒருவர்.

எரின் ஹனிகட் என்ற 38 வயதான அந்த பெண் ஹார்மோன் சமநிலையின்மை பிரச்சினையால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இதனால் அவருக்கு எடை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளும் வந்துள்ளன.

இதற்காக சிகிச்சைகள் பெற்ற நிலையிலும் தொடர்ந்து அவரது முகத்தில் தாடி வளர ஆரம்பித்தது.

பலமுறை அகற்றியும் தாடி வளர்ந்த தால் ஒரு கட்டத்தில் அவர் தாடியை அகற்றுவதை நிறுத்தி விட்டார்.

அதோடு அதனையே சாதனையாக மாற்றுவதற்கும் முடிவு செய்த அவருக்கு சுமார் 30 சென்றி மீட்டர் அதாவது தாடி வளர்ந்தது.

இதன் மூலம் ஒரு பெண்ணால் இவ்வளவு நீளமான தாடி வளர்த்து கின்னஸ் உலக சாதனையில் இடம் பிடித்துள்ளார்.

### செஞ்சோலை மாதிரி கிராமம், தேறாங்கண்டல் மக்களுக்கு

# ரூ.5 லட்சத்து 36 ஆயிரம் பெறுமதியில் அத்தியவசிய உணவுப் பொருள்கள்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் செஞ்சோலை மாதிரி கிராமம், தேறாங்கண்டல் மக்களுக்கு 5 லட்சத்து 36 ஆயிரம் ரூபா பெறுமதியில் அத்தியாவசியமான உணவுப் பொருள்களை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

செஞ்சோலையில் இருந்து தற்போது கிளிநொச்சி – மலையாளபுரத்தில் உள்ள செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கும் பொருளாதாரத்தால் நலிவடைந்த 24 குடும்பங்களை தெரிவு செய்து 96 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு – துணுக்காய், தேறாங்கண்டல் கிராமத்தில் வசிகும் பொருளாதாரத்தால் நலிவடைந்த 110 குடும்பங்களை தெரிவு செய்து 4லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கினார்.

அவர்களுடன் சமூக செயற்பாட்டாளரான இ. தயாபரன், தேறாங்கண்டல் கிராம சேவையாளர் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# தொழில் வாய்ப்புக்கு வெளிநாடு சென்ற இலங்கையருக்கு வீடமைக்கும் திட்டம்

### வேலைவாய்ப்பு பணியகம், வீடமைப்பு அதிகாரசபை இணைவு



தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு வீடுகளை அமைத்து கொடுக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து ஆரம்பித்துள்ளன.

இந்த வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் மூன்று முறைகளின் மூலம் செயற்படுத்தப்படவுள்ளது.

முதலாவது, வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு சொந்தமான நிலத்தில் வீடு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது முறை நிலமற்ற பணியாளர்களுக்கு நகர்ப்புறத்துக்கு வெளியே, அவர்கள் விரும்பும் பகுதியில் வீடுகள் கட்டிக் கொடுப்பது. மூன்றாவது முறை அடுக்குமாடி குடியிருப்புகளை நிர்மாணிப்பதாகும்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நிதியுதவி வழங்குவதுடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் காலங்களில் விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரால் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளமானது வீட்டுத் தேவையிலுள்ள வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பில் ஏற்கனவே கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளது. இதன்போது சுமார் ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், வீடுகள் தேவைப்படும் வெளிநாட்டுப் பணியாளர்களின் குடும்பங்கள் குறித்தும் மாவட்ட அளவில் தகவல் திரட்டப்பட்டு வருகிறது என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.




# சுற்றுலாத்துறையால் 2023 இல் வருவாய் ஒரு பில்லியன் அமெ. டொலரை எட்டியது

## இலங்கை மத்திய வங்கியின் தரவு தகவல்

2023 இல் சுற்றுலாத்துறை மூலமாக நாட்டுக்குக் கிடைத்துள்ள வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவித்துள்ளன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி, ஓகஸ்ட் முதல் 10 நாள்களில் மட்டும் நாட்டுக்கு 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதத்தில் 9 ஆயிரத்து 146 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தற்காலிக தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 6 லட்சத்து 48 ஆயிரத்து 775 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்பத்திரிகளில் இழைக்கப்படும் தவறுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## அவை "மெடிக்கல் எரர்" என்கிறார் சத்தியமூர்த்தி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு வைத்தியசாலைகளில் இழைக்கப்படும் தவறுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி இது "மெடிக்கல் எறர்" என்றும் தெரிவித்தார்.

யாழில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

அண்மைக் காலமாக இங்குள்ள சில வைத்தியசாலைகளில் ஏற்பட்ட குழந்தைகள் இறப்பும் கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண்ணொருவருக்குக் கர்ப்பப்பை அகற்றப்பட்டதுமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதற்கமைய ஆரம்ப கட்டத்தில் அந்த நிலையங்கள் நேரடியாக பார்வையிட்டு சில சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடராக பூர்வாங்க விசாரணைக்கான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் கிழமைகளில் பாதிக்கப்பட்ட தரப்புகளிடம் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. அதே நேரம் அந்தந்த நிலையங்களில் கடமையில் இருந்த சம்பந்தப்பட்ட தரப்புகளையும் அழைத்து கலந்துரையாடவுள்ளோம்.

குறிப்பாக அந்த நேரத்தில் அங்கே காணப்பட்ட கையேடுகள் மற்றும் அறிக்



கைகள் பரிசோதிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கும்வகையில் சிபாரிசுகள் செய்யப்படும்.

வைத்தியசாலைகளை பலரும் நாடி வருகின்ற போது சில தவறுகள் நடக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதாவது "மெடிக்கல் எறர்" என்று அது சொல்லப்படுகிறது.

குறிப்பாக அமெரிக்காவில் இந்த "மெடிக்கல் எறர்" காரணமாக வருடத்துக்கு 40 ஆயிரம் பேர் இறந்து விடுகிறார்கள். இது ஏனைய நாடுகளிலும் அதேபோன்று இலங்கையிலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் மிகக் குறைவான அளவில் இந்த "மெடிக்கல் எறர்" சம்பவங்கள் இடம் பெற வேண்டும் அல்லது இத்தகைய தவறுகள் இடம்பெறாது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அதனையும் மீறி ஏதாவது தவறுகள் ஏற்படுகின்ற போது அதனை சுட்டிக்காட்ட வேண்டும்.

இருப்பினும் அவ்வாறான தவறுகள் ஏற்படுகிற பொழுது அங்கே இயங்கும் அந்த நடைமுறை முதலில் மாற்றப்பட வேண்டும். தனிநபருக்கு எதிராகக் குற்றங்களைத் தவிர்த்து அந்த முறையில் முதலில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். ஒரு இறப்பு என்பது அல்லது தவறு என்பது திடீரென ஒருவர் விடுகிற பிழைகளால் ஏற்படுவது அல்ல.

அங்கே காணப்படும் சட்டதிட்டம் மற்றும் நிர்வாக அமைப்புகள் பௌதீகவள அமைப்புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் முற்காப்பாக மேற்கொள்ள வேண்டிய ஆயத்தங்கள் எனப் பல்வேறு காரணிகள் இருக்கின்றன. ஆகவே இந்த அனைத்து காரணிகளையும் ஒரு முறைப்பாடு அல்லது விசாரணை என்று வருகின்ற போது அனைத்தையும் திருத்தும் வகையில் சிபாரிசுகள் செய்யப்படும் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக கிளிநொச்சி வைத்தியசாலை உட்பட வேறு சில வைத்தியசாலைகளில் இருந்தும் எமக்கு முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. அது சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சிபாரிசுகளும் பரிந்துரைகளும் வழங்கப்படும்.அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லோரும் கடமை நேரங்களில் கடமை ஸ்தானத்தில் கட்டாயம் இருக்க வேண்டும்.–என்றார்.

# வீரமுனை படுகொலை வழக்கை அரசு முன்னெடுக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு வீரமுனை மக்கள் பகிரங்க மடல்

வீரமுனை படுகொலை தொடர்பான வழக்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று வீரமுனை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் 'வீரமுனை மக்களின் நீதிக்கான கோரிக்கை' என்ற தலைப்பிலான பகிரங்க மடல் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

வீரமுனைபடுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பகிரங்கமாக வாசிக்கப்பட்டு பொது மக்களால் அங்கீகரிக்கப்பட்டது.




இப்படுகொலை தொடர்பான வழக்கை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் , பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கப் பெற வேண்டும், குற்றம் இழைத்தவர்களை நீதிக்கு முன் நிறுத்தித் தண்டனை வழங்க வேண்டும், இம்மக்களின் தொடர் நினைவேந்தல்களை அனுஷ்டிப்பதற்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும் போன்றன அந்தப் பகிரங்க மடலில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஆகும்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வீரமுனை கிராமத்தில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் தஞ்சமடைந்து இருந்தனர். இவ்வாறு இருந்த வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, வீரச்சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக 55 பேர் 1990.08.12 அன்று இலங்கை இராணுவத்துடன் அந்தக் காலப்பகுதிகளில் சேர்ந்து இயங்கி வந்த ஊர்காவல் படையினரால் வெட்டியும், குறிப்பாக சிறுவர்கள் சுவற்றில் அடித்தும் கொல்லப்பட்டனர்.

அத்துடன் காயப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாட்சியங்களை அழிக்கும் நோக்குடன் காணாமலும் ஆக்கப்பட்டனர். இன்றுடன் இந்த மக்கள் கொல்லப்பட்டு 33 வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில் இப்படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் இன்னும் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது.

இதன் காரணமாக உரிய பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நலன் விரும்பிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் பெறவேண்டும் என வலியுறுத்தி இன்றைய நாளில் (ஆவணி 12) வருடா வருடம் இலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்திய வகையில் நினைவேந்தல்களை பல வகையான சவால்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே இலங்கை அரசு இவ்வாறான சம்பவங்களுக்கு முழுமையாக பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றது என்பதனை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த யுத்த காலப் பகுதிகளில் இது போன்ற படுகொலைகள் தமிழர் பகுதிகளில் பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மயிலந்தனை படுகொலை மற்றும் திருகோணமலை குமாரபுரம் படுகொலை ஆகியவற்றுக்காக இலங்கை நீதி மன்றங்களில் கண்கண்ட சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல்கள் மேற்கொண்ட போதும் உரிய பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. மறுக்கப்பட்ட வேதனையான சம்பவத்தையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

அதே போன்றே இன்றைய தினம் (2023.08.12) இம்மக்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் 33 ஆண்டு நினைவேந்தலினை மேற்கொள்ளப்பட்டது. வீரமுனை படுகொலை நடந்து இன்று 33ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மீளவும் நீதிக்காக தங்களிடம் கோரிக்கை வைக்கிறோம். –என்றுள்ளது.

# அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் பிரசவத்தில் தரையில் விழுந்து உயிரிழந்த குழந்தை!

## குற்றஞ்சாட்டியுள்ளனர் பெற்றோர்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பிரசவத்தின் போது வைத்தியசாலையின் அலட்சியத்தால் சிசுவொன்று தரையில் விழுந்து உயிரிழந்துள்ளது என்று பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி கல்லஞ்சிய பகுதியைச் சேர்ந்த ரம்பேவ, டி. அது. தக்சிலா உதயங்கனி என்ற 35 வயதுடைய கர்ப்பிணிப் பெண்முதல் பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அன்றைய தினமே அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மகப்பேறு விடுதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

இதன்போது பிரசவத்தில் செவிலியர்களின்அலட்சியத்தால்சிசுதரையில்விழுந்துள்ளது.

குறித்த சிசு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சுமார் மூன்று நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளது.

அநுராதபுரம் வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட தாயின் நோய நிர்ணய அட்டையில் பிரசவத்தின் போது குழந்தை தரையில் விழுந்ததில் குழந்தையின் தலை பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குழந்தை பிறக்கும் போது அழவில்லை என்றும், இதயக் கோளாறு காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளது என்றும் இறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அவசர அறிக்கையை வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

# மேர்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் ஜனாதிபதியின் நடவடிக்கைதான் என்ன?

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கேள்வி





மேர்வின் சில்வா மனநோயாளியா? சட்டவாட்சி இல்லையா? ஜனாதிபதியின் நடவடிக்கைதான் என்ன? என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேர்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலையே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஒரு நீண்டநாள் மனநோயா ளியா? அல்லது தன்னை சிங்கள மக்கள் பெருமையாக நினைப்பார்கள் என நினைத்து எல்லை மீறிய நாகரிக மற்ற வார்த்தைகளால் உளறி வருகிறாரா?

அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது பல விடையங்களைப் பேசினாலும் வடக்கு – கிழக்கு தமிழர் கள் தொடர்பில் அவர் பேசியது அடிப் படை மனித உரிமை மீறல. சட்டத்தை தன்னுடைய கையில் எடுத்துள்ளார்.

அதாவது வடக்கு – கிழக்கில் தமிழர் கள் விகாரைகளில் கை வைத்தால் அவர்களது தலையை களனிக்குக் கொண்டு வருவேன் என்று ஊளை யிட்டுள்ளார்.

இதற்கு முன்னைய காலத்தில் முன்னாள் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை அம்மையாரை அவர்களை திருமணம் செய்வதாக வாய்கிழிய கத்தினார்.

அதன் பின்னர் முன்னேஸ்வரம் ஆலய வேள்வியைத் தடுப்பதாக பிதற்றி னார். இறுதியில் மன்னிப்பு கேட்டார் தற்போது தமிழரின் தலையை எடுப் பாராம்.

உண்மையான சட்டவாட்சி நடை பெறுவதை ஜனாதிபதி உறுதி செய்ய வேண்டுமாக இருந்தால் உடனடியாக சட்ட நடவடிக்கையை எடுத்து மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் மேர்வின் சில்வாவின் கருத்தை ஆட்சியாரின் மறைமுக சர்வாதிகாரமாவே புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களை இனவாதிகளையும் மனநோயாழிகளையும் வைத்து கிள்ளுக் கீரையாகப் பாவிக்க நினைத் தால் நாடு மீண்டும் மிகப் பெரும் அதள பாளத்தில் எதிர் காலத்தில் செல்லும் என்பதை தென்னிலங்கை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். – என்றுள்ளது.



# சீனக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு கவலை வெளியிட்டுள்ளது இந்தியா!

ஒக்டோபர் மாதம் கொழும்புக்கு சீன ஆராய்ச்சிக் கப்பல் ஒன்று வரகை தரவுள்ளது. அம்பாந்தோட்டை துறை முகங்களில் இந்த சீன ஆராய்ச்சிக் கப்பல் நங்கூரமிடுவதற்கான ஏற்பாடு கள் செய்யயப்பட்டு வருகின்றன. இது குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள் ளது.

சீன ஆய்வுக் கப்பல் 'ஷீ யான் சிக்ஸ்' என்ற கப்பலே எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ளது. நவம் பர் மாதம்வரை கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் கப்பல் நங்கூரமிடப்படும் என்று செய்தி கள் வெளியாகியுள்ளன.

3,999 தொன் எடையுள்ள 'ஷி யான் சிக்ஸ்' என்ற கப்பல் சீனாவின் குவாங் சோவில் இருந்து தனது பயணத் தைத் தொடங்கியுள்ளது. தற்போது தென்சீனக் கடலில் தெற்கு நோக்கிச் சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய நீர்வள அபி விருத்தி மற்றும் முகவரகம் அல்லது நாரா நிறுவனத்துடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த சீனக் கப்ப லுடன் விஞ்ஞானப் பயணத்தைத் தொடங்கத் தயாராக இருப்பதாகவும், தென்னிந்தியப் பெருங்கடல் பகுதி உட்பட விரிவான ஆய்வை மேற்கொள்ள விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

எவ்வாறாயினும், கடல்சார் பாதுகாப் பில் கவனம் செலுத்தும் இந்திய அரசு, சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகை குறித்து கவலை வெளியிட்டுள் ளது. அது தொடர்பில் இலங்கை அர சுக்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட ப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி சீனப் போர்க்கப்பல் ஒன்று இலங்கைக்கு வந்து நேற்று முன்தினம் (12) நாட்டை விட்டுச் சென்றுள்ளது. கடந்த ஓகஸ்ட் 2022 இல், சீனக் கப்பல் 'யுவான் வாங் ஃபைவ்' அம்பாந்தோட்டை துறை முகத்தில் நங்கூரமிட்டபோது இந்தியா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கையில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின்
# முதலீட்டுக்கு இடமளிக்க ரவூப் ஹக்கீம் வலியுறுத்து!

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் உயர் கல்வித் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,முன்னாள் உயர் கல்வி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற துருக்கி கிர்னே அமெரிக்கபல்கலைக்கழகத்தோடு ஒன்றிணைந்துள்ள மெட்றோபொலிட்டன் கல்லூரி நடத்திய சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இதனைக் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் உயர் கல்வித் துறையை மேம்படுத்துவதற்கான நாடாளுமன்ற தெரிவிக்கு குழுவின் அங்கத்தவர் ஒருவராக என்னையும் கடந்த ஆண்டு நியமித்திருந்தார்கள். ஆரம்பக் கல்வி, இடைநிலை கல்வி, உயர்கல்வி ஆகியவற்றின் மீது எங்களது கவனம் திரும்பியிருந்தது. பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள்,தேசிய கல்வி ஆணைக்குழுவினர்,தேசிய கல்வி நிறுவனத்தினர் உட்பட உயர்கல்வி துறையோடு சம்பந்தப்பட்ட பல தரப்பினரையும் அழைத்து நாங்கள் நிலைமையை நன்றாக ஆராய்ந்தோம். அதன் அடிப்படையில் எங்களது முடிவுகளை நாங்கள் முழுமைப் படுத்தி, விதந்துரைகளை முன்வைத்துள்ளோம். அவற்றை இனிப் பொது மக்கள் அறியக்கூடியதாக இருக்கும்.

பல்கலைக் கழக கற்கை நெறிகளின் தர நிர்ணயம் மற்றும் அவற்றுக்கான உத்தரவாதம்,அங்கீகாரம் என்பனவும்உறுதிப்படுத்தப்படவேண்டியவையாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒரு கண்டிப்பான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்றது. பல்கலைக்கழக கல்வி சார் மற்றும் நிருவாகச் செயல்பாடுகளைப் பொறுத்தவரை, நாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகமும் சுயமாக தனித்து செயல்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பதும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதும் எமது அபிப்பிராயமாகும்.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்தும், சுதந்திரத்துக்கு பின்னரும் இலங்கை கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறது. இலங்கை பலவற்றில் முன்னிலையில் திகழ்கின்றது. சர்வஜன வாக்கெடுப்பு, பெண்களுக்கான வாக்குரிமை, இலவசக் கல்வி போன்றவற்றில் பிராந்தியத்தில் இலங்கை முன்னிலையில் இருந்துள்ளது.

ஜனாதிபதியும் அவரது அண்மைய நாடாளுமன்ற உரையில் மாகாண சபைகளும் கூட பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு முன்வர வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்து இருக்கிறார். இவ்வாறான கருத்திட்டங்கள் உள்ளன.

பல்கலைக்கழக கல்வி முறை அரசியலில் இப்பொழுது ஒரு பேசு பொருளாக மாறி இருக்கிறது. வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பிரவேசம் இலங்கையின் இலவச கல்வி திட்டத்திற்கு பாதிப்பை உண்டு பண்ணும் என்ற ஒரு விதமான அச்சத்தையும், எதிர்ப்பையும் ஒரு சாரார் தெரிவித்து வருகிறார்கள்.அதில் உண்மையில்லை. - என்றார்.

மெற்றோபொலிடன் கல்லூரியின் தலைவர் கல்முனை முன்னாள் நகர பிதா கலாநிதி சிராஸ் மீராசாஹிப் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். அத்துடன் வட சைப்பிரஸில் அமைந்துள்ள, துருக்கி கிர்னே அமெரிக்க பல்கலைக்கழகத்தின் உப தலைவர் பேராசிரியர் இஸ்மத் இஸினே மற்றும் பிரபல தொழில் அதிபரும். தெரண மற்றும் லிபர்டி ஊடக வலையமைப்புகளின் தலைவருமான திலித் ஜயவீர ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.



# இன்றைய ராசி பலன்கள் - 15.08.2023


மேஷம்

தேவையற்ற எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். மகிழ்ச்சியாக அமைதியாக இருங்கள்.

இன்று திட்டமிட்டு பணியாற்றுங்கள். உங்கள் கவனத்தை இழக்க வேண்டாம்.

இன்று அமைதியாக இருந்தால் சிறந்த நாளாக அமையும். உங்கள் துணையுடன் வாக்கு வாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான போக்கு மேற்கொள்வது நல்லது.

இன்று பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு குறைந்து காணப்படும். செலவுகளும் அதிகமாக காணப்படும். அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற் கொள்வது நல்லது. தின் பண்டங்களை தவிர்ப்பது நல்லது.


ரிஷபம்

இன்று சிறப்பான நாள். ஆற்றலும் உற்சாகமும் அதிகரித்து காணப்படும். உங்கள் சுய முன்னேற்றத்தில் வெற்றி காண்பீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

இன்று பணியில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் நாள். கடினமான பணிகளைக் கூட எளிதாக முடித்து விடுவீர்கள்.

உங்கள் துணையுடன் கலகலப்பாக பழகுங்கள். இந்த அணுகுமுறை நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பண வரவும் காணப்படும். புதிய முதலீடுகள் செய்வதற்கு இன்று திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.


மிதுனம்

இன்றைய நாள் சாதகமாக இல்லை. என்றாலும் சிறிதளவு கடினம் தான் காணப்படும். நீங்கள் இன்றைய நாளை சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமான தாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக தவறான புரிந்துணர்வு மற்றும் சூடான விவாதங்கள் ஏற்படலாம்.

இன்று பண இழப்பு காணப்படும். கவனமுடன் இருந் தால் அதிக இழப்பை தவிர்க்கலாம்.

இன்று கால் வலியால் அவதிப்படலாம். உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கலாம்.


கடகம்

இன்று மன உளைச்சல் காணப்படும். இதனை போக்க இசைகளை கேட்டு மகிழுங்கள் அல்லது திரைப்படம் பார்த்தல் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுங்கள். இன்று முக்கியமான முடிவு களை எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வேறுபாடுகளைக் களைந்து மகிழ்ச்சியுடன் இருங்கள்.

தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் வருத்தம் உண்டாகும். முடிந்த அளவு சேமிக்கப் பாருங்கள்.

உங்கள் தாயின் சிறிய உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.


சிம்மம்


இன்று அதிக வலிமையும் உறுதியும் தேவை. உங்கள் கவனத்தை அதிகப்படுத்துங்கள். இன்று நீங்கள் தைரியத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை முன்னுரிமைப்படுத்தி திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் அசௌகரியமான உணர்வு காணப்படும். உறவை வலிமையாக்க உங்கள் பிரிய மானவருடன் சிறந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும் .

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்களிடம் உள்ள பணத்தை கொண்டு பொறுப்புகளை சமாளிக்க இயலாது.

தேவையற்ற கவலைகள் காணப்படும். இதன் காரண மாக பதட்டம் மற்றும் தலைவலி காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.


கன்னி

இன்று அனைத்து செயல்களும் சுமுகமாக நடக்கும். நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக ஆற்றுவீர்கள். மகிழ்ச்சி நிறைந்து காணப்படுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை சுய மாக எடுக்க வேண்டும்.

திட்டமிட்டபடி உங்கள் பணிகளை ஆற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வுடன் கூடிய உறவு காணப்படும். நீங்கள் இருவரும் பொருத்தமான ஜோடியாய் எடுத்துக்காட்டாய் விளங்குவீர்கள்.

இன்று சிறிய அளவில் கடன்கள் வாங்க நேரலாம். இது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.


துலாம்

இன்று நம்பிக்கை நிறைந்து காணப்படும். தைரியமும் உறுதியும் வழிகாட்டும். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் வெற்றி பெற நீங்கள் புத்துணர்ச்சியுடன் உங்கள் திறமையை வெளிப்படுத்தி பணியாற்றுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றம் சிறந்த முறையில் காணப்படும். உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள். மன உறுதியுடனும் காணப்படுவீர்கள்.


விருச்சிகம்

இன்று அதிக நற்பலன்கள் கிடைக் காது. நம்பிக்கை எண்ணம் இருந்தால் செயல்கள் சிறப்பாக நடக்கும். இன்று நம்பிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்றைய தினத்தை நீங்கள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும். தேவையற்ற விஷயங்களுக்காக உணர்ச்சி வசப்படாமல் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. ஸ்திரத்தன் மையை பராமரிக்க பணத்தை சேமிக்க வேண்டும்.

பல் உபாதைகள் ஏற்படும் என்பதால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.08.2023




இன்று மன உளைச்சல் காணப்படும். இசையை கேட்பதன் மூலம் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளலாம். பிரச்சினைகளைச் சமாளிகாலாம். விவாதங்களில் ஈடுபட வேண்டாம். நட்பான அணுகுமுறை தேவை.

தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை,

உங்கள் துணையுடன் உரையாடும் போது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். ஆரோக்கியமான உறவை பாதிக்கும் தேவையற்ற விஷயங்களைப் பேசுவீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படலாம். கையிலிருக்கும் பணத்தை கவனமாகக் கையாளவும். அதிகமாக செலவு செய்யாதீர்கள்.

குறைந்த தூக்கம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். தொடர் முயற்சி மூலம் சுய வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள இன்றைய நாளை பயன்படுத்துங்கள். பக்தி ஸ்லோகங்கள் படிப்பது நன்மை தரும்.

பணியிடச் சூழ்நிலை வளர்ச்சி தரும் வகையில் காணப்படுகின்றது. புதிய வேலை வாய்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் காதல் வயப்பட்ட நிலையில் பேசுவீர்கள். இதனால் இருவருக்கும் இடையேயான உறவில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சாதகமாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நீங்கள் துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்களிடம் உறுதியான அணுகுமுறை காணப்படும். எதிர்கால நன்மை கருதி எடுக்கும் முடிவுகள் நல்ல பலனை அளிக்கும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். இதனால் வெற்றி பெறுவதற்கான உந்துதல் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரின் அன்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்கள் சேமிப்பும் அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் இதனை பராமரிக்கலாம்.




நீங்கள் தகவல் பரிமாற்றத்தின் போது கவனமாக இருக்க வேண்டும். பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி நிமித்தமான பயணம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் பேசும் பொழுது கட்டுப்பாடு அவசியம். இது இருவருக்கும் இடையில் உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

சிறப்பான நிதிநிலையை பராமரிக்க இன்றைய நாள் சிறந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும் அல்லது சம்பாதிக்கும் திறன் குறைவாக இருக்கும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்காது.





